රහස්‍යයි

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## අ.පො.ස.(සා.පෙළ) විභාගය - 2014
## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2014

| විෂයය අංකය<br>பாட இலக்கம் | 87 | විෂයය<br>பாடம் | தொடர்பாடலும் ஊடகக் கல்வியும் |
|---|---|---|---|

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 1 | 31. | 1 |
| 02. | 2 | 12. | 4 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 1 | 13. | 1 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 3 | 24. | 4 | 34. | 2 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 1 | 35. | 1 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 2 | 36. | 2 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 1 | 18. | 1 | 28. | 4 | 38. | 4 |
| 09. | 3 | 19. | 1 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 2 | 30. | 3 | 40. | 4 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තර පත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்: 40

The National e-Learning Portal for The General Education

## 87 T II

## புள்ளியிடும் திட்டம்

1. வானொலி ஊடகமொன்றால் நடாத்தப்பட்ட வினாடி-வினா போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட ரவிக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பொன்று கிடைத்தது.

   (i) வானொலி ஊடகத்துக்கே உரித்தான தனித்துவமான இரண்டு இயல்புகளைப் பெயரிடுக.

- வானொலி ஒரு செவிப்புல ஊடகம்
- குரலை மையப்படுத்தியது
- உடனடியாகத் தகவல்களைச் சொல்லவல்லது
- தொடர்பாடல் ஒருவழிப் பாதையானது
- வானொலித் தகவல்வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளக் கல்வியறிவு அவசியமற்றது
- அந்தந்த நேரங்களில் தகவல்களைப் பெறமுடிவது
- நேரலையில் தொடர்பாட முடிவது
- படைப்பாக்கத்திறன் கொண்ட செவிமடுப்பைத் தரவல்லது

(புள்ளி 01 x 02 = 02 புள்ளிகள்)

(ii) வினாடி-வினா நிகழ்ச்சியொன்றின் ஊடாக மேற்கொள்ளப்படவல்ல தொடர்பாடலின் இரண்டு நோக்கங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

கல்வியூட்டுதல்

தகவலளித்தல்

பொழுதுபோக்கு / மகிழ்வூட்டுதல்

தூண்டலை ஏற்படுத்துதல்

(புள்ளி 01 x 02 = 02 புள்ளிகள்)

(iii) ரவி போட்டியில் வெற்றி பெற்றதான செய்தி நாளாந்தச் செய்திப்பத்திரிகைகள் பலவற்றில் அறிக்கையிடப்பட்டிருந்தது செய்தித் தலைப்பில் இடம்பெறக்கூடிய நான்கு அம்சங்களை எடுத்துரைக்க.

- தகவல் தருபவர் (who)
- சொல்லப்படும் தகவல் (says what)

- ஊடகம் (which channel)
- யாருக்குத் தகவல் தரப்படுகிறது (to whom)
- எத்தகைய தாக்கத்தை முன்வைத்து (with what effect)
- எவ்வாறு தகவல் அளிக்கப்படுகிறது (how)

**மேற்குறிப்பிட்ட அம்சங்களை உள்ளடக்கி விளக்கியிருப்பின் புள்ளிகள் வழங்குக.**

**(புள்ளி 1 / 2 x 04 = 02 புள்ளிகள்)**

(iv) குறித்த வெற்றி பற்றி தம்மால் தரப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றை வெளிநாட்டுப் பிரதிநிதிக்கு மிக விரைவில் அனுப்புமாறு ரவிக்கு மேற்படி வானொலி அலைவரிசை தகவலளித்தது. வெளிநாட்டுப் பிரதிநிதிக்கு குறித்த கடிதம் அனுப்புவதற்கு மிகப் பொருத்தமானதும் விரைவானதுமான வழிமுறையாக அமைவது எது ?

தொலைநகல் (Fax)

**(02 புள்ளிகள்)**

(v) இந்த வெற்றி தொடர்பிலான சுருக்கமான வானொலிக் கலந்துரையாடலுக்காக, வானொலியின் சிறுவர் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவர் ரவியை அழைத்திருந்தார். வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஒருவரின் **இரண்டு** செயற்பாடுகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

- நிகழ்ச்சியைத் திட்டமிடுதல்
- பிரதியைத் தாமே தயாரித்தல் அல்லது தயாரிக்கப் பணித்தல்
- பிரதியைச் செம்மையாக்குதல்
- நிகழ்ச்சியை ஒழுங்கமைத்தலும் தயாரித்தலும்
- நிகழ்ச்சியை அளிக்கை செய்தல் அல்லது முன்வைத்தல்
- பணிகளைப் பின்தொடர்ந்து ஒழுங்கமைப்பை பராமரித்தல்
- செய்யப்பட்ட பணிகளை மதிப்பிடல்

**(1 x 2 = 02 புள்ளிகள்)**

(vi) ரவி வெளிநாடு சென்று தங்கியிருக்கும் காலத்தில் தனது வீட்டிலுள்ளோருடன் இணையம் வழியாக எழுத்துமூலத் தொடர்பைப் பேணுவதற்கு அவருக்குள்ள மிக வசதியான முறை எது ?

மின்னஞ்சல் (e-mail)

அல்லது

முகப்புத்தகம் (Facebook)அல்லது ஸ்கைப் (Skype) மூலமான குறுஞ்செய்தி (SMS)

**(02 புள்ளிகள்)**

(vii) மேற்படி இணையம் வழியாகப் பரிமாறப்படக்கூடிய வேறு இரண்டு வகைத் தகவல்களுக்கு உதாரணங்களை எழுதுக.

புகைப்படங்கள்

வரைபடங்கள் அல்லது சித்திரங்கள்

வாழ்த்து மடல்கள்

காட்சிக் குறிப்புக்கள் (வீடியோ)

ஒலிக்குறிப்புக்கள்

ஆவணங்கள்

**(புள்ளி 1 x 2 = 02 புள்ளிகள்)**

(viii) இணையவழித் தொடர்பிலுள்ள பலவீனம் காரணமாக தகவல் பரிமாற்றத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. ஷெனோன் மற்றும் வீவரின்படி, குறித்த சூழ்நிலைக்கு ஏற்ற தொடர்பாடல் வழிமுறையில் இடம்பெறும் அந்த காரணி பற்றிச் சுருக்கமாக விளக்குக.

தடை / இடையூறு (Noise)

தகவல்களை முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு இடையூறாக இருப்பவை தொடர்பாடலின் தடை அல்லது இடையூறு எனப்படும். இவை தொழில்நுட்பத்தடை மற்றும் மொழிரீதியான தடைகள் என இரு வகைப்படும்.

**(இரண்டு வகையான தடைகளையும் குறிப்பிட்டு விவரித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகளை வழங்குக.)**



The National e-learning Portal for The General Education

(1 x 2 = 02 புள்ளிகள்)

(ix) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், தான் செல்லும் இடங்களின் புகைப்படங்களைத் தனது எண்மான (டிஜிட்டல்) கமராவினால் பதிவுசெய்ய ரவி எண்ணியுள்ளார். புகைப்படத் துறையில் எண்மானப் புகைப்படத் தொழினுட்பத்தின் **இரண்டு** தாக்கங்களைக் குறிப்பிடுக.

- கையாள்தல் இலகுவானது
- செம்மையாக்கல் மேற்கொள்வது சுலபம்
- வெவ்வேறு வடிவங்களுக்கு அல்லது ஊடகங்களுக்கு கொண்டுசெல்லக்கூடியது
- எண்ணிக்கையில் அதிகமான புகைப்படங்களை எளிதில் சேமிக்கமுடியும்

**(புள்ளி 1 x 2 = 02 புள்ளிகள்)**

(x) தான் நாடு திரும்பிய பின்னர், தனது பயணம் பற்றிய விபரமான தகவல்களை தனது வகுப்பிலுள்ள நண்பர்களிடம் தெரிவிக்க ரவி எண்ணியிருந்தான். இந்த நோக்கத்திற்காக ரவி பயன்படுத்தக்கூடிய **இரண்டு** எறிவைகளைப் பெயரிடுக.

பல்லூடக எறிவை (Multimedia Projector)

துரித எறிவை (Digital Processor)

வழுக்கி எறிவை (Slide Projector)

மேந்தலை எறிவை (Overhead Projector)

**(புள்ளி 1 x 2 = 02 புள்ளிகள்)**

2. (i) "*சரசவி சந்தரச* முதலாவது சிங்களச் செய்திப்பத்திரிகையாகும்".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடைக்கான காரணத்தைத் தருக.

இல்லை

இலங்கையில் வெளியான முதலாவது சிங்கள செய்திப்பத்திரிகை "லங்கா லோகய".

**(01 புள்ளி)**

(ii) "ஒரு நூலுக்கு முகப்பு அட்டை முக்கியமான ஒரு காரணியல்ல".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடைக்கான இரண்டு காரணங்களைத் தருக.

இல்லை.

- நூலைப் பாதுகாப்பதற்கு முக்கியமானது.
- கவனஈர்ப்பைப் பெற்றுத் தருவது
- நூலின் தலைப்பு, எழுதியவர், அதன் பெறுமதி ஆகிய விபரங்களைப் பெறமுடியும்
- நூலைப் பராமரிப்பது அல்லது எடுத்தாள்வது இலகு
- ஏனைய நூல்களிடமிருந்து தனித்து அடையாளப்படுத்துவதற்கு முடியும்

**(02 புள்ளிகள்)**

(iii) "செய்தி அறிக்கையிடலில் தலைகீழ் பிரமிட்டு முறை மிகப் பொருத்தமானது".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடையை மூன்று காரணங்களைத் தந்து விளக்குக.

ஆம்.

- செய்தியின் மிக முக்கிய விடயத்திலிருந்து தொடர்புபட்ட சாதரண விடயங்கள் வரை புரிந்துகொள்ளும் வாய்ப்பு வாசகர்களுக்குக் கிடைக்கிறது.
- செய்திக்குப் பொருத்தமான விபரங்களை ஒழுங்குமுறைப்படி தருவதற்கு செய்தி ஆசிரியருக்கு அல்ல்து செய்தியை தயாரிப்பவருக்கு வாய்ப்பு உள்ளது.
- செய்திக்கான இடம் அல்லது நேரம் போதாமலிருப்பின் செய்தியின் இறுதி வாக்கியங்களில் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ நீக்குவதன் மூலம் அச்செய்திப்பெறுமதி குறையாதிருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

**(03 புள்ளிகள்)**

(iv) "சினிமா இயக்குநரின் ஊடகம்".
நீங்கள் மேற்படி கூற்றுடன் உடன்படுகிறீர்களா ? உங்கள் விடையை நான்கு காரணங்களைத் தந்து விளக்குக.

ஆம்.

- திரைப்பட ஆக்கத்தின் முழுமையான பொறுப்புணர்வு கொண்ட படைப்பாளியாகக் கருதப்படுபவர்.
- திரைக்கதை அல்லது எழுத்துருவை அமைப்பவரும் பெரும்பாலும் அவரே.
- பாத்திரங்களுக்கேற்ப நடிகர் / நடிகைகளின் தெரிவுகளை மேற்கொள்பவர்
- ஒளிப்பதிவில் அழகியல்வழி இறுதித் தீர்மானத்தை மேற்கொள்பவர்
- ஒளிப்பதிவு மேற்கொள்ளப்படும் பொருத்தமான இடங்களை (locations) தெரிவுசெய்பவர்
- பௌதிக மற்றும் மனித வளங்களை ஒழுங்கமைப்பவர்
- தயாரிப்பாளருடன் ஒப்பந்த வழிமுறைப்படி பணியாற்றுபவர்
- திரைப்படத்தைத் தனது பார்வையிலிருந்து உருவாக்கித் தருபவர்

**மேற்குறித்தவற்றை ஒத்த கருத்துக்கள் தரப்பட்டிருந்தாலும் புள்ளிகள் வழங்கலாம்.**

**(04 புள்ளிகள்)**

3. 'தொடர்பாடலின் செயற்பாடுகள்' என்னும் பொருளில், உங்கள் வகுப்பு மாணவர்களுக்குப் பேச்சொன்றை நிகழ்த்துமாறு நீங்கள் பணிக்கப்பட்டுள்ளீர்கள்.
   (i) இது, எந்த வகையான தொடர்பாடல் வகையினுள் உள்ளடங்குகின்றது ?

கூட்டு அல்லது குழுத் தொடர்பாடல்

**(01 புள்ளி)**

The National e-Learning Portal for The General Education

(ii) உங்கள் பேச்சில் 'வெளிச்சவீட்டுத் தொழினுட்பம்' எவ்வாறு உங்களால் பயன்படுத்தப்படும் என்பதை விளக்குக

கண்மூலமான தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டது. பேச்சைக் கேட்பவர்களுடனான இணைப்பை கண்வழிப் பார்வை மூலம் உறுதிசெய்வதுடன், அவர்கள் தொடர்பாடலில் ஈடுபட்டிருப்பதை பேச்சாளர் நிச்சயப்படுத்துவார். பார்வை நோக்கு இடமிருந்து வலமும் வலமிருந்து இடமும் கிரமமாகச் செலுத்தப்படுதல் இங்கு நிகழும்.

**(02 புள்ளிகள்)**

(iii) உங்கள் பேச்சினை மேலும் கவனயீர்ப்புக்குள்ளாக்குவதற்கு நீங்கள் பயன்படுத்த எண்ணியுள்ள மூன்று வாய்மொழி சாராத தொடர்பாடல் முறைகளைத் தனித்தனியாக விளக்குக.

National e-learning Portal for The General Education

- முகத் தோற்றங்கள் / முக பாவனை
- கண் தொடர்பு
- உடல் அசைவு
- தலை மற்றும் கைகளை உள்ளடக்கிய அங்க அசைவுகள்
- குறியீடுகள்
- உடற் தோற்றம்
- அபிநயங்கள்
- மொழித் துணை இயல்புகள் – குரலின் வேகம், தொனி முதலியன
- உடையமைப்பு

**(03 புள்ளிகள்)**

**பெயரிடப்பட்டிருந்தால் 01 புள்ளி மாத்திரம் வழங்குக.**

(iv) வெகுசனத் தொடர்பாடலின் நான்கு அடிப்படை இயல்புகளை விவரிக்குக.

- தொழில்நுட்பத்தோடு இணைந்தது அல்லது அதனைப் பயன்படுத்துவது
- பெரும் எண்ணிகையான மக்களை இலக்குவைப்பது
- பின்னூட்டம் கிடைக்கப்பெறாது அல்லது தாமதமான பின்னூட்டம்
- ஒருவழித் தொடர்பாடல்
- நிறுவனமயப்படுத்தப்பட்டது
- தொடர்பியலாளர் தொழில்சார் தகைமை உடையவர்
- தம்முன் நேரடியாக இல்லாத மக்களுடன் தொடர்பாடல் மேற்கொள்ளப்படும்
- பல வாயிற்காப்பாளர்கள் இயங்கும் பொறிமுறையைக் கொண்டது
- உடனையான மற்றும் தொடர்ச்சியான தகவல் வழங்கும் பணி
- பகிரங்கமான தகவல் வெளிப்படுத்துகை
- புவியியற் பரப்புக்களைக் கடந்தது
- பெரும்பாலும் ஆதாய நோக்கம் கொண்டது

**(04 புள்ளிகள்)**

**(பெயரிடப்பட்டிருந்தால் 01 புள்ளி மாத்திரம் வழங்குக.)**

4. பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு மரதன் ஓட்டமாகும்.

(i) மரதன் ஓட்டப்பாதையை குறுக்கீடுகளற்றதாக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட பிரதான தொடர்பாடல் உபகரணம் எது ?

ஒலிபெருக்கி

**(01 புள்ளி)**

(ii) செல்லிடத் தொலைபேசிகளிலுள்ள வீடியோ மூலம் மரதன் ஓட்டம் பதிவுசெய்யப்பட்டது. மரதன் ஓட்டத்துடன் தொடர்புடையதாக, செல்லிடத் தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வேறு நான்கு எடுத்துக்காட்டுகளைப் பெயரிடுக.

- தகவல் வழங்குதலும் பெறுதலும்
- நேரக்கணிப்பீடு மேற்கொள்ளப்படலாம்
- புகைப்படம் எடுத்துக் கொள்ளல்
- செல்லக்கூடிய பாதை விபரத்தை அறிதல்
- புவியியல் நிலையெடுப்பை அறிந்துகொள்ளலாம் (GPS வழியாக)
- குறுஞ்செய்திகள் அனுப்பப்படல்
- நேர்முக வர்ணனை மேற்கொள்ளப்படலாம்
- ஒலிப்பதிவு மேற்கொள்ளப்படலாம்

**(1 / 2 x 4 = 2 புள்ளிகள்)**

(iii) வீடியோ காட்சிகளைக் கொண்டு குறித்த மரதன் பற்றிய சுருக்கமான விவரணத் திரைப்படமொன்றும் உருவாக்கப்பட்டது. விவரணத் திரைப்படமொன்றின் மூன்று முக்கிய பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

- சாதாரண கதையாடல் கட்டமைப்பைப் போன்று தொடக்கம், இடை நிலை முடிவு ஆகிய அம்சங்கள் காணப்படாது
- யதார்த்தம் எவ்வாறுள்ளதோ அவ்வாறே பிரதிபலிக்கப்படும்
- இயக்குநரின் வழிகாட்டலில் இயங்கும் நடிகர்களோ அல்லது கலைஞர்களோ காணப்படமாட்டார்கள்
- கலை நெறியாள்கை, ஒப்பனை, செயற்கைப் பின்புல அமைப்பு (setting) ஆகியன மிக இழிவளவில் காணப்படும்
- காட்சிகளுடன் இணைந்த ஒலிக்குறிப்பு அல்லது வர்ணனை (commentary or voice over) ஒலிவடிவமாக இணைக்கப்பட்டிருக்கும்

**(3 புள்ளிகள்)**

**(பெயரிடப்பட்டிருந்தால் 01 புள்ளி மாத்திரம் வழங்குக)**

(iv) மரதன் ஓட்டம் சம்பந்தமான சுருக்கமான விவரணத் திரைப்படமொன்றில் பின்வரும் அளவுள்ள காட்சிகள் (shots) உள்ளடக்கப்பட்டிருந்தன. குறித்த அளவு ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான காட்சிகளை (scenes) தனித்தனியாக எடுத்துக்காட்டுக.

(a) அணுக்கக் காட்சி (close-up)

(b) நடுத்தரக் காட்சி (mid-shot)

(c) நீண்டதூரக் காட்சி (long-shot)

(d) மிக நீண்டதூரக் காட்சி (extreme long-shot)

அணுக்கக் காட்சி (close-up)

- ஓட்ட வீரரின் முகபாவனை
- வீரரின் கால்களின் நகர்வு
- கைதட்டலின் அருகாமைப் படம்

நடுத்தரக் காட்சி (mid-shot)

- ஓட்ட வீரரின் இடுப்புக்கு மேலான அசைவைக் காட்டும் காட்சி
- ஓரிரு பார்வையாளர்களின் அவதானிப்பு

நீண்டதூரக் காட்சி (long-shot)

- ஓட்ட வீரர்கள் பலரை உள்ளடக்கிய அவர்கள் ஓடும் இயக்கத்தைக் காட்டும் காட்சி
- முழுமையான தோற்றத்தில் பார்வையாளர்கள் சிலரின் குதூகலம்

மிக நீண்டதூரக் காட்சி (extreme long shot)

- ஓட்டப்பந்தய தளத்தைக் காட்டும் முழுமையான காட்சி
- உயரமான இடத்திலிருந்து பதிவு செய்யப்படும் நிகழ்வு பற்றிய காட்சி

**(04 புள்ளிகள்)**


Close-up Shot


Mid Shot


Long Shot


Extreme Long Shot

5. (i) வீதிகளில் செல்லும் வாகனங்களை அவதானிப்பதற்காக சந்திகளில் பொருத்தப்படும் கமரா அமைப்புகளை அடையாளம் காணப் பயன்படுத்தப்படும் பதம் எது ?

குறுந்தூரத் தொலைக்காட்சி வலையமைப்பு (CCTV Network)

( 01 புள்ளி)

(ii) அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள ஊடகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் இரண்டு நிறுவனங்களைப் பெயரிட்டு, அவை ஒவ்வொன்றும் ஒழுங்குபடுத்தும் வெகுசன ஊடக வகையைக் குறிப்பிடுக.

இலங்கைப் பத்திரிகைச் சபை – அச்சு ஊடகம்

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் – திரைப்படங்கள் (அவற்றை இறக்குமதி செய்தலும் விநியோகம் செய்தலும் உள்ளடங்கலாக)

பொது அளிக்கைகள் சபை (Public Performance Board)

– திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், மேடை அளிக்கைகள்

இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு – இலத்திரனியல் ஊடகங்கள்

**( நிறுவனங்களைப் பெயரிட்டிருந்தால் 1 / 2 x 2 = 01 புள்ளி)**

**(ஒழுங்குபடுத்தும் ஊடகவகையைக் குறிப்பிட்டிருந்தால் 1 / 2 x 2 = 01 புள்ளி)**

**மொத்தம் = 02 புள்ளிகள்**

(iii) வெகுசன ஊடக உரித்துடைமையின் **இரண்டு** பிரதான வகைகளைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு வகையிலும் அடங்கும் தொலைக்காட்சி அலைவரிசைகள் **இரண்டினதும்** வானொலிச் சேவைகள் **இரண்டினதும்** பெயர்களைக் குறிப்பிடுக.

அரச உரித்துடைமை

தனியார் உரித்துடைமை

| | அரசு | தனியார் |
|---|---|---|
| தொலைக்காட்சி | ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | சிரச ரி.வி. |
| | சுயாதீனத் தொலைக்காட்சிச் சேவை (ஐ.ரி. என்) | சுவர்ணவாஹினி |
| | | ஹிரு ரி.வி. |
| | 'ஐ' சனல் | பௌத்தய |
| | நேத்ரா ரி.வி. | ரெலிஷான் (ரி.என்.எல்) |
| | வசந்தம் ரி.வி. | சி.எஸ்.என் |
| | | தெரண |
| | | வர்ணம் ரி.வி. |
| | | சக்தி ரி.வி. |
| | | எம்.ரி.வி. |

| | அரசு | தனியார் |
|---|---|---|
| வானொலி | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | சிரச எவ்.எம். |
| | லக்ஹண்ட | ஹிரு எவ்.எம். |
| | தேசிய சேவை | ஷா எவ்.எம். |
| | சிற்றி எவ்.எம். | பௌத்தய |
| | வர்த்தக சேவை | வி எவ்.எம். |
| | தென்றல் | வர்ணம் எவ்.எம். |
| | | சக்தி எவ்.எம். |
| | | சூரியன் எவ்.எம். |
| | | தமிழ் எவ்.எம். |
| | | ரங்கிரி எவ்.எம். |

The National e-Learning Portal for The General Education

**(உரித்துடமை குறிப்பிடப்பட்டிருந்தால் 1 /2 x 2 = 01 புள்ளி)**

**(உதாரணங்கள் தந்திருந்தால் 1 /2 x 4 = 02 புள்ளிகள்)**

**மொத்தம் = 03 புள்ளிகள்**

(iv) எளிமையான வகுப்பறை உபகரணமான கரும்பலகையைப் பயன்படுத்தும்போது கவனம் செலுத்த வேண்டிய நான்கு அம்சங்களைச் சுருக்கமாக விவரிக்குக.

- அனைத்து மாணவர்களுக்கும் தெரியும்படியாக இருக்க வேண்டும்
- பலகையை மறைத்து எழுதவோ, வரையவோ கூடாது
- இடமிருந்து வலமாக எழுத வேண்டும்
- எழுத்துக்கள் நடுத்தர அளவில் அல்லது பெரிய அளவில் எழுதப்பட வேண்டும்
- வரிகளுக்கிடையே இடைவெளி வேண்டும்
- திகதி, நேர அட்டவணை என்பன ஒரு நிரலில் காட்டப்பட வேண்டும்
- கரும்பலகையி கீழ் நிரல் வெறுமையாக விடப்படல் வேண்டும்

(பெயரிடப்பட்டிருந்தால் 01 புள்ளி)

(விளக்கம் தரப்பட்டிருந்தால் = 04 புள்ளிகள்)

6. நவீன், சுயாதீனமான செய்திப்பத்திரிகை ஊடகவியலாளராவார். அதேவேளை, வானொலி ஊடகமொன்றுடனும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக அவர் தொடர்புகளைப் பேணிக் கொள்கிறார்.

(i) நவீனுக்கு முக்கியமானதாக அமையும் இரண்டு சர்வதேச செய்தி முகவரகங்களைப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| Reuters | - | ரொய்ட்டர்ஸ் |
| AFP | - | பிரஞ்சு செய்திச் சேவை |
| UPI | - | யுனைட்டட் பிரஸ் இன்ரநஷனல் |
| AP | - | அசோசியேட்டட் பிரஸ் |

( 1/2 x 2 = 1 புள்ளி)

(ii) உள்ளூர் செய்தி அறிக்கையிடலில் நவீன் பயன்படுத்தக்கூடும் என நீங்கள் எதிர்பார்க்கும் நான்கு செய்தி மூலங்களைச் சுருக்கமாக விளக்குக.

- செய்தி முகவர்கள்
- செய்தியாளர் மாநாடு
- செய்திக் குறிப்பு
- நேர்முகக் கலந்துரையாடல்

- செயலமர்வுகள்
- விரிவுரைக் கூட்டங்கள்
- உத்தியோகபூர்வ அறிக்கை
- செய்தி நாட்குறிப்பு
- தொலைபேசி அழைப்புக்கள்
- பீட் (Beat)அறிக்கைகள்
- நூலகம் மற்றும் சுவடிகள் கூடம்
- வேறு ஊடகங்கள்

(விளக்கம் தரப்பட்டிருந்தால் : 02 புள்ளிகள்)

( பெயரிடப்பட்டிருந்தால் = 01 புள்ளி)

(iii) தயாரிப்பு பணியில் நவீன் பங்களிக்கக்கூடிய, மூன்று வகை வானொலி நிகழ்ச்சிகளைத் தனித்தனியாக விவரிக்குக.

1. செய்திகள்
2. சஞ்சிகை நிகழ்ச்சிகள்
3. வானொலி நாடகங்கள்
4. இசை நிகழ்ச்சிகள்
5. கலந்துரையாடல்கள்
6. விவரணச் சித்திரங்கள்
7. நேரடி நிகழ்ச்சிகள்
8. சம்பாஷணை நிகழ்ச்சிகள்
9. விரிவுரைகள்
10. சமய நிகழ்ச்சிகள்
11. வினாடி – வினா நிகழ்ச்சிகள்

( விவரிக்கப்படிருந்தால் = 3 புள்ளிகள்)

(பெயரிடப்பட்டிருந்தால் மாத்திரம் 01 புள்ளி)

(iv) செய்திப்பத்திரிகையிலும் வானொலி ஊடகத்திலும் பயன்படும் மொழி தொடர்பில் அவதானிக்கப்படக் கூடிய நான்கு முக்கிய வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

| செய்திப்பத்திரிகை | வானொலி |
|---|---|
| • நீண்ட வாக்கியங்கள் பயன்படுத்தப்படலாம்<br>• புள்ளிவிபரங்கள் முழுமையாக தெரிவிக்கப்படலாம்<br>• புகைப்படங்கள் இணைக்கப்பட்டு தகவலளிப்பது உறுதிப்படுத்தப்படும்<br>• சிக்கலான விபரங்கள் இலகுவாக முன்வைக்கப்படலாம்<br>• பொதுவான, சீர் மொழி பயன்படுத்தப்படும் | • எளிமையான மொழிப்பிரயோகம்<br>• சுருக்கமான வாக்கியங்களின் பயன்பாடு<br>• புள்ளிவிபரங்கள் சுருக்கமாகவும் அவதானமாகவும் தரப்பட வேண்டும்<br>• படைபாக்கத்திறனுடனான மொழிப் பிரயோகம்<br>• சீரான மொழிப்பிரயோகம்<br>• சிக்கலான விடயங்களை முன்வைப்பது ஒப்பீட்டளவில் கடினம்<br>• வட்டாரமொழிப் பயன்பாடு நிகழ்ச்சிகளைப் பொறுத்து அமையும்<br>• உச்சரிப்பில் நேர்த்தியும் கவனமும் அவசியம் |

**(04 புள்ளிகள்)**

7. வெகுசன ஊடகச் செய்திகளைச் சரியாக உள்வாங்கிக் கொள்வதன் மூலம் பெறுநர் அறிவார்ந்த பிரசையாகின்றார்.
   (i) வெகுசன ஊடகப் பெறுநர்களின் இரண்டு பிரதான வகைகளைப் பெயரிடுக.

வாசகர்

நேயர்

இரசிகர் / பார்வையாளர்

**(1 /2 x 02 = 01 புள்ளி)**

(ii) மேற்குறித்த இரண்டு வகைப் பெறுநர்களும் கொண்டிருக்கக்கூடிய இயல்புகள் **இரண்டு** வீதம் தனித்தனியாகக் குறிப்பிடுக.

வாசகர்

- வாசிப்பதற்குரிய கல்வியறிவு அவசியம்
- விருப்பத்திற்கேற்ப வாசிப்புப் பகுதிகளைத் தெரிவுசெய்து வாசிக்கலாம்
- முழுமையான அவதானம் வாசிப்பிற்கு அவசியமானது
- விரும்பிய நேரத்தில், இடத்தில் பத்திரிகை வாசிக்கப்படக் கூடியது
- பார்வைப்புலம் மாத்திரம் ஊடகப்பாவனைக்குப் போதுமானது
- வாசிப்பதன் மூலமாக காட்சிவழி படைப்பாக்கத் திறனுக்கு இடந்தருவது

நேயர்

- தனக்கு விருப்பமான அலைவரிசையைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு
- படைப்பாக்கத்திறனுடான செவிமடுத்தல்
- எச்சூழலிலும் செவிமடுத்தல் இடம்பெறலாம்

இரசிகர் / பார்வையாளர்

- பார்ப்பதற்கும் கேட்பதற்குமான ஊடகம்
- கல்வியறிவு ஊடகப் பாவனைக்கு அவசியமற்றது
- தனக்கு விருப்பமான அலைவரிசையைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு
- விருப்பத்திற்கேற்ப நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்வையிடலாம்
- தொடர்ச்சியான அவதானம் அவசியம்

**(1/2 x 04 = 02 புள்ளிகள்)**

(iii) சிறுவர்கள் மீது வெகுசன ஊடகங்கள் ஏற்படுத்தவல்ல **மூன்று** எதிர்மறை விளைவுகளைச் சுருக்கமாக விவரிக்குக.

- வன்முறை மனநிலை அதிகரிக்கும் போக்கு
- தவறான நுகர்வுமுறைகளுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இசைவாதல்
- பொருந்தாத நடத்தைகள் விருத்திசெய்யப்படும் ஆபத்து

- பொருந்தாத உணவுப்பழக்க வழக்கங்களுக்கு அறிமுகமாதல்
- படைப்பக்கத்திறன்கள் பாதிக்கப்படுதல்
- தவறான முன்மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளல்

**(03 புள்ளிகள்)**

**(விளக்கம் தரப்பட்டிருத்தல் வேண்டும்)**

(iv) விழிப்புணர்வுள்ள பெறுநர் கொண்டிருக்க வேண்டிய நான்கு அடிப்படைத் தகுதிப்பாடுகளைத் தனித்தனியாக விவரிக்குக.

- வெகுசன ஊடகங்கள்வழி தரப்படுவனவற்றை சரியாக விளங்கிக்கொள்ளும் ஆற்றல்
- வெகுசன ஊடகங்கள் மறைப்பவற்றைப் புரிந்துகொள்ளும் ஆற்றல்
- வெகுசன ஊடகங்களின் நிகழ்ச்சி நிரலை இனங்கண்டுகொள்ளுதல்
- வெகுசன ஊடகங்களால் பெறுநர்களால் எவ்வாறு கையாளப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளும் திறன்
- பெறுநர்கள் தூண்டப்படும் சந்தர்ப்பங்களைப் புரிந்துகொள்ளல்
- தமக்குத் தேவையாவற்றை, பிரயோசனமளிப்பதை இலகுவாக விளங்கிக் கொள்ளும் ஆற்றல்.
- சமூகத்தில் ஊடகம் சம்பந்தமாக எடுத்துரைக்கக்கூடிய அறிவைப் பெற்றுக்கொள்ளல்
- எப்போதும் ஊடகச்செயற்பாடுகளில் அவதானமாக இருத்தல்

**(தனித்தனியாக விபரிக்கப்படிருந்தால் = 04 புள்ளிகள்)**